**மொறட்டுவ மாநகர சபை - 2022**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

மொறட்டுவ மாநகர சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 252) 219 ஆம் பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் மொறட்டுவ மாநகர சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி மாநகர சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மாநகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மாநகர சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் கீழே குறிப்பிடப்படுகின்ற தேவைகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டமை கணக்கீட்டுக் கொள்கை கூற்றின் 2.1 இன் கீழ் காண்பிக்கப்பட்ட போதிலும், இந்த புதிய நியமத்தின் பிரகாரம் கணக்குகள் பேணிச் செல்வதற்கு தேவையான மாதிரி படிவங்கள் மற்றும் குறியீட்டு இலக்கம், மேல்மாகாண உள்ளூராட்சி திணைக்களத்தின் 2019 திசெம்பர் 31 ஆம் திகதிய LGD/09/2019 இலக்க மற்றும் அதற்கு உரியதாக விநியோகிக்கப்பட்ட திருத்தப்பட்ட சுற்றறிக்கையின் மூலம் வழங்கப்பட்டிருந்தது. எனினும் மொரட்டுவ மாநகர சபையால் 2022 ஆம் ஆண்டின் கணக்குகளை பேணிச் செல்வதற்காகவும், அந்த சுற்றறிக்கையின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட படிவங்கள் | சுற்றறிக்கையின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட படிவங்களை பயன்படுத்தி 2022 ஆம் ஆண்டின் கணக்குகள் தயாரிக்கப்பட்டுள்ளது. | உள்ளூராட்சி ஆணையாளரால் அறிமுகப்படுத்தப்பட்ட இலக்கம் மற்றும் படிவங்களின் பிரகாரம் கணக்கேடுகள் பேணிச் செல்லப்படல் வேண்டும். |

மற்றும் குறியீட்டு இலக்கம் எதுவும் பயன்படுத்தப்படாதிருந்ததுடன், நிதிக்கூற்றுக்களை தயாரித்தலும் இதில் குறிப்பிடப்பட்ட நியமங்கள் மற்றும் விதி இலக்கம் 84 இன் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்து கணக்கீடு செய்தல், சொத்துக்களுக்கு பெறுமானத்தேய்வு செய்தல் மற்றும் ஆண்டின் மூலதன மானிய வருமானங்களை இனங்காணல் நியமத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் சரியாக இனங்கண்டு மீள்மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்படும். | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | திசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்ட வங்கி இணக்கக் கூற்றின் பிரகாரம் இனங்காணப்படாத 305 செலவு மீதிகளின் பெறுமதியான ரூபா 192,332 இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | மேலும், ரூபா 192,322 மீதியே காணப்படுவதுடன், அந்த மீதி எதிர்காலத்தில் தீர்த்து வைக்கப்படும். | இனங்காணப்படாத செலவு மீதியை இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நாளதுவரையாக்கப்பட்ட சொத்துக்கள் பதிவேடு, காலப்பகுப்பாய்வு, விரிவான பட்டோலை, மீதி உறுதிப்படுத்தல் மற்றும் பௌதீக இருப்புக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையினால் ரூபா 164,101,841 ஆன 12 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகாரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. | மேலும் நிலுவை பதிவேடுகளை பரீட்சித்து பதிவேடுகளுக்கு கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மீதிகளை உறுதிப்படுத்துவதற்கு தேவையான பட்டோலைகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

## 1.7 இணங்காமைகள்

### சட்டம், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | சட்டம், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 156 | அறிக்கை மற்றும் பங்களிப்பு பணம் அனுப்புவதில் தாமதத்தின் அடிப்படையில் மிகை கட்டணம் எழுந்திருந்ததுடன், 2015 முதல் 2019 ஆம் ஆண்டு வரையான காலத்தில் சபையால் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு செலுத்தப்பட்ட ரூபா 1,088,565 மிகை கட்டணம் அதற்கு பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடம் இருந்து அறவிடப்பட்டிருக்க வில்லை. | நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நிதிப்பிரமாணம் 156 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | நிதிப்பிரமாணம் 156 | இலக்கம் 1329 நிதி என்ற திட்டங்கள் அங்கீகரித்தல் தொடர்பாக சபைக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கின் போது 2018 யூலை 20 ஆம் திகதி வழங்கப்பட்ட நீதிமன்ற கட்டளையின் பிரகாரம் முறைப்பாட்டாளருக்கு இழப்பீட்டு பணம் மற்றும் வழக்கு கட்டணமாக சபையால் செலுத்தப்பட்ட ரூபா 11,602,318 தொகையை அதற்கு பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடம் | சபையினால் செலுத்தப்பட்ட பணத்தை மீண்டும் அறவிடுவதற்காக ஆரம்ப விசாரனைகளை மேற்கொள்வதற்காக உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்தின் உத்தியோகத்தர்கள் மூன்று பேரை உடைய குழு நியமிக்கப்பட்டுள்ளதுடன் பரிந்துரை கிடைத்த பின்னர் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | விரைவாக விசாரணைகளை பூர்த்தி செய்து பரிந்துரைகளை அமுல்படுத்துதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | இருந்து அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | | |
| (iii) | நிதிப்பிரமாணம் 486(i) ஆ | 1998 முதல் 2003 ஆம் ஆண்டு வரையான காலத்திற்குரிய பெறுமதி ரூபா 473,288 ஆன 85 மதிப்பிழந்த காசோலைகளில் இருந்து எந்தவொரு தொகையும் மீளாய்வாண்டின் போதும் அறவிடப்பட்டிருக்க வில்லை. | பொறுப்பு வாய்ந்த தரப்பினரை இனங்காண்பதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் அந்த குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 90,675,820 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 136,192,585 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**2022** **2021**

| | வருமானமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| **(i)** | ஆதன வரியும் வரியும் | **213,357,880** | **206,930,699** | **261,364,133** | **293,898,809** | **219,250,000** | **209,908,617** | **[illegible]08,074,820** | **310,103,404** |
| **(ii)** | வாடகை | **5,524,400** | **10,448,312** | **6,316,645** | **4,357,667** | **4,860,000** | **5783,533** | **5,177,498** | **3,124,678** |
| **(iii)** | அனுமதிப் பத்திரக் கட்டணம் | **6,500,000** | **9,462,600** | **9,503,875** | **2,933,175** | **6,000,000** | **10,063,850** | **10,022,575** | **2,974,450** |
| **(iv)** | ஏனைய வருமானம் | **594,000** | **669,763** | **647,957** | **678,305** | **544,000** | **655,423** | **646,544** | **658,706** |
| | மொத்தம் | **225,976,280** | **227,511,374** | **277,832,610** | **301,867,956** | **230,654,000** | **226,411,423** | **[illegible]23,921,437** | **316,861,238** |

**2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்**

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **வீதவரியும் வரியும்** | | |
| | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை ஆதன வரி மீதி ரூபா 293,898,809 ஆக இருந்ததுடன், அதில் நிலுவை ஆதன வரி பெறுமதி ரூபா 50,000 விஞ்சிய 453 ஆதன வரி அலகுகளில் இருந்து அறவிட வேண்டிய பெறுமதி ரூபா 105,603,527 ஆகும். | எதிர்காலத்தில் நிலுவை ஆதன வரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை ஆதன வரியை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(ஆ)** | **வாடகை** | | |
| (i) | மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அதிகாரம்) 254(அ) 1 மற்றும் 2 ஆவது பிரிவுகளின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீண்ட கால குத்தகைக்கு வழங்கப்பட்ட 258 ஆதனங்களில் இருந்து அறவிட வேண்டிய நிலுவை மீதி ரூபா 4,151,326 இனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2020, 2021 ஆம் ஆண்டுகளுக்காக ரூபா 522,679 தொகையை பதிவழிப்பதற்காக ஆளுனரின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், 2023.03.31 ஆம் திகதியில் உள்ளவாறான நிலுவையில் ரூபா 2,479,308 தொகையை அறவிடுவதற்கு முடியுமாக இருந்ததுடன், நீண்ட காலம் கொண்டுவரப்படுகின்ற மீதியின் கூட்டுமொத்தமான ரூபா 1,118,969 தொகையை பதிவழிப்பதற்கு ஆளுனரின் அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | சபைக்குச் சொந்தமான வாடகைக்கு வழங்கப்பட்ட 258 ஆதனங்களில் 08 இன் வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன், 28 ஆதனங்களுக்காக வாடகை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்க வில்லை. | மத்திய சந்தையில் 08 கடைகளை மீண்டும் வாடகைக்கு வழங்காமல் இருப்பதற்கு 2021.12.02 ஆம் திகதிய மாதாந்த சபை கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டிருந்தது. மிகுதி ஆதனங்களுக்காக புதிய மதிப்பீடொன்றை பெற்று உடன்படிக்கை | வாடகை உடன்படிக்கை செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (இ) **மிகை கட்டணம்**<br>மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பொறுப்பு வாய்ந்த தரப்பினருக்கு எதிராக கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் முன்னைய ஆண்டில் விதிக்கப்பட்ட 02 மிகைக் கட்டணத்திற்காக 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 760,173 அறவிட வேண்டியிருந்தது. | மிகை கட்டணத்தில் விடுவிக்கப்பட்ட 06 சபை உறுப்பினர்கள், மிகை கட்டணம் செலுத்த வேண்டிய போதும் மரணமடைந்த சபை உறுப்பினர் தவிர மிகுதி மிகைக்கட்டணதாரர்களினால் இந்த முழுத்தொகையும் செலுத்த வேண்டியமைக்கான விடயங்கள் காணப்பட்ட போதிலும், மாநகர கட்டளைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாக உத்தியோகத்தர்கள் விடுவிக்கப்பட்டமையின் காரணமாக நீதிமன்ற செயற்பாடுகளுக்காக அனுப்புவதற்கும் பிரச்சினைகள் ஏற்பட்டமையினால் மாநகர ஆணையாளரால் ஆளுனரின் செயலாளரின் தேவையான வழிகாட்டல் மற்றும் ஆலோசனைக்காக விடயங்கள் கோரப்பட்டுள்ளது. | மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (i) ஆதன வரி பிரிவில் கணனி சேவையில் நியமிக்கப்பட்டுள்ள ஊழியரால் பொது நுழைவு குறியீட்டைப் பயன்படுத்தி (Common pass word) 2018 ஆம் ஆண்டில் 10 சந்தர்ப்பங்களின் போது ரூபா 105,893 பெறுமதியான சிட்டைகள் இரத்துச் செய்யப்பட்டு ஆதனவரி மோசடி மேற்கொள்ளப்பட்டிருந்தது. பதவிநிலை | ஆரம்ப விசாரணை அறிக்கை மற்றும் குற்ற வரைவு உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்திற்கு 2021.12.09 ஆம் திகதி அனுப்பப்பட்டுள்ளது. | பரிசோதனைகள் விரைவாக பூர்த்தி செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உத்தியோகத்தருக்கு சொந்தமாக காணப்பட வேண்டிய இரகசிய நுழைவு குறையீடு (Secret pass word) மோசடியாக பயன்படுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நட்டம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | | |
| (ii) | சபை உறுப்பினர்களிடம் இருந்து அறவிட வேண்டிய நிலுவை எரிபொருள் மீதியான ரூபா 75,000 மீளாய்வாண்டின் போதும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | அறவிடுவதற்கு சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | அறவிட வேண்டிய தொகையை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | 2019 முதல் 2022 ஆம் ஆண்டு வரையான காலத்திற்காக கிடைக்க வேண்டிய ரூபா 27,172,234 சம்பளம் மீளளிப்பு செய்யப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | சம்பளத்தை மீளளிப்பு செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.2 மனித வள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு வேலை நிக்கம் செய்யப்பட்ட 06 பேர்களிடம் இருந்து ரூபா 258,303 தொகையும், மரணமடைந்த மற்றும் ஓய்வுபெற்றுச் சென்ற 28 உத்தியோகத்தர்களிடம் இருந்து ரூபா 678,818 தொகையும் ஆக கூட்டுமொத்தமாக ரூபா 3,671,001 ஆன ஊழியர் கடன் மீதி அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நிலுவை கடனை விரைவாக அறவிடுதல் வேண்டும். |
| (ஆ) | செயற்பாடற்ற கடன் மீதியில் உள்ளடக்கப்பட்ட 104 உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிட வேண்டிய ரூபா 1,565,677 கடன் மீதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவை கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | நிலுவை கடன் மீதியை விரைவாக அறவிடுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | பகல் இரவு சேவைகளை வழங்குகின்ற தீயணைப்பு பிரிவிற்காக ஆரம்ப தீயணைப்பாளர், முதலாம் தர தீயணைப்பாளர் மற்றும் மோட்டார் இயந்திர செயற்படுத்துனர் போன்ற பிரதான சேவை தொகுதிகள் 02 இற்கு உரிய அங்கீகரிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் 06 பேர்களின் பதவிகள் 2014 ஆம் ஆண்டு முதல் வெற்றிடமாக காணப்பட்டது. | பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு அங்கீகாரம் கோரப்பட்டுள்ளதுடன், ஆரம்ப தீயணைப்பாளர் மற்றும் முதலாம் தர தீயணைப்பாளர் தற்போது நிறுவனத்தில் சேவையாற்றுகின்ற இயந்திர தீயணைப்பாளர் பதவிகளில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டமையால் அவர்களின் சேவைக் காலம் முடிவடையும் போது முறையாக வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வெற்றிட பதவிகளை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | எஞ்சினை பழுதுபார்க்காமையினால் 11 வாகனங்கள் ஓட்டத்தில் இருந்து அகற்றப்பட்டிருந்ததுடன், அந்த வாகனங்கள் நீண்ட காலம் முதல் செயற்பாடற்று காணப்பட்டது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | வாகனங்களை பழுதுபார்ப்பதற்கோ அல்லது விற்றுத் தீர்ப்பதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | நகர அபிவிருத்தி அதிகார சபையில் இருந்து தேசிய சேமிப்பு வங்கியில் பேணிச் செல்லப்படுகின்ற கணக்கில் ரூபா 7,137,020 மீதியொன்று காணப்படுவதுடன், நகர அபிவிருத்தி அதிகார சபையின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் அந்த பணத்தை ஆக்கபூர்வமான பணிகளுக்காக ஈடுபடுத்தப்படவில்லை. | எகடஉயன, கொரலவெல்ல, அங்குலானை சுடலை கூடங்களை மறுசீரமைப்பதற்காக இந்த பணத்தை ஈடுபடுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் , தற்போது கொரலவெல்ல பொது மயான நிலத்தில் திருத்த நடவடிக்கைகளுக்காக சபை நிதியத்தில் இருந்து செலவிடப்பட்ட தொகை ரூபா 1,860,879.46 இனை நகர அபிவிருத்தி அதிகார சபைக்காக பேணிச் செல்லப்படுகின்ற கணக்கில் இருந்து மீளளிப்பு செய்வதற்கு நடவடிக்கை | ஆக்கபூர்வமான பணிகளுக்காக ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | | எடுக்கப்பட்டுள்ளது. | |
| (இ) | லுனாவ விருந்தினர் விடுதி ஸ்தாபிக்கப்பட்டுள்ள சபைக்குச் சொந்தமான 0.7063 ஹெக்டேயர் பரப்பளவான காணியில் மாடி வீட்டு செயற்திட்டத்திற்காக வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையால் கையேற்கப்பட்ட போதிலும், 2022 திசெம்பர் 31 ஆம் வரையிலும் அதிகார சபையில் இருந்து சபைக்கு இழப்பீட்டு பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | 2014.11.17 ஆம் திகதிய அமைச்சரவை குறிப்பின் மூலம் லுனாவ மாடி வீட்டு தொகுதிக்காக இழப்பீட்டு பணம் செலுத்துவதற்கு அரசாங்கத்தின் பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் படி திறைசேரியில் நிதியை பெற்றுக்கொள்வதற்காக நகர குடியிருப்பு அதிகார சபைக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதும் இது வரையும் அந்த பணம் எங்களுக்கு கிடைத்திருக்கவில்லை. இது தொடர்பாக நகர அபிவிருத்தி அதிகார சபைக்கும், சட்டமா அதிபருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. | கிடைக்க வேண்டிய இழப்பீட்டு பணத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | லக்ஷபத்திய பிரதேசத்தில் சிறுவர் மற்றும் தாய் சேய் சிகிச்சை நிலைய கட்டிடத்தில் மேல் மாடியில் நூலகமொன்றை ஸ்தாபிப்பதற்காக ரூபா 237,599 பெறுமதியான உபகரணங்கள் 2019 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், நூலகமொன்று ஸ்தாபிக்கப்படாதிருந்ததுடன், கட்டிடம் பயனற்று காணப்பட்டது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | விளைவற்ற சொத்துக்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | சபை அதிகார பிரதேசத்திற்குரிய வீரபுரன் அப்பு வாகன தரிப்பிடத்தில் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு சபைக்கு கையளிக்கப்பட்டு 2½ வருடங்கள் கடந்திருந்த போதும் வாகன தரிப்பிடத்தை வாடகைக்கு வழங்கி வருமானத்தை உழைத்துக் கொள்வதற்கு சபை நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன், பராமரிப்பு | 2023.03.28 ஆம் திகதி முகாமைத்துவ குழு தீர்மானத்தின் படி இந்த இடத்தில் ஒரு பகுதி சபை ஊழியர்களின் வாகனங்களை தரித்து வைப்பதற்காக ஒதுக்கப்பட்டு மிகுதி பகுதி சபை ஊழியர்களின் மூலம் அனுமதிப் பத்திரம் வழங்கி கட்டணத்தை அறவிட்டு வெளித்தரப்பினருக்கு ஒதுக்கிக் கொள்வதற்கான | விளைவற்ற சொத்துக்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நடவடிக்கைகளுக்காக நாளாந்தம் ஊழியர்கள் மூன்று பேருக்கும், தனியார் பாதுகாப்பு சேவைக்கு இரண்டு பேருக்கும் சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது. | முறைமையொன்றை தயாரிக்கும் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றது. | |
| (ஊ) | டிக்சன் ஜே பீரிஸ் விளையாட்டு அரங்கின் விளையாட்டு மண்டப கட்டிடம் உடைந்த நிலையில் காணப்பட்டதுடன், அதற்கு அடுத்தால் நிர்மாணிக்கப்பட்டுள்ள சிறுவர் பூங்காவும் நீண்ட காலம் முதல் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நிதிஏற்பாடு கிடைக்கும் முறையில் இந்த விளையாட்டு அரங்கை மறுசீரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |

**3.4 வாகனப் பயன்பாடு**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வாகனத்தை ஓட்டத்தில் ஈடுபடுத்துவதற்காக வருமான அனுமதிப் பத்திரம் பெற வேண்டிய போதிலும், சபைக்குச் சொந்தமான 03 வாகனங்களுக்காக வருமான அனுமதிப் பத்திரம் பெறப்பட்டிக்கவில்லை. | வருமான அனுமதிப் பத்திரம் பெறாத வாகனங்களின் எண்ணிக்கை 03 ஆகும். | வருமான அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | சபைக்கு சொந்தமான வாகனங்களை உரிய சாரதிகளுக்கு கையளிக்கும் போது எழுத்து மூலமாக கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும், மாநகர சபைக்குரிய வாகனங்கள் சாரதிகளுக்கு கையளிக்கும் போது எழுத்துமூல கையளித்தல் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்க வில்லை. | வாகனங்களை சாரதிகளுக்கு எழுத்து மூலம் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |